**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | **திரு. அழகர்சாமி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.10.2023**

எதிரிகள் 1,2 ஆஜர். எதிரிகள் 3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். மளிகைக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை மட்டும் தான் தெரியும். 2 முதல் 4 எதிரிகளைத் தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன விஜயலெட்சுமி எனது சித்தி ருக்குமணியின் மகள் ஆவார். 20.09.2016 ம் தேதியன்று நான் திருப்பூரில் இருந்து மதுரை ஜீவா நகருக்கு வந்திருந்தேன். ஜீவா நகரில் இருந்து முத்துப்பட்டியில் உள்ள எனது தாத்தா வீட்டிற்குச் சென்றிருந்தேன். 23.09.2016 ம் தேதியன்று என் மாமா அசா3.பழனியாண்டவர் என்பவரை அன்று காலை சுமார் 08.00 மணிக்கு சந்தித்தேன். அவர் வீட்டிலேயே நான் சாப்பிட்டுவிட்டு, 08.00 மணிக்கு மேல் பஜாருக்குச் செல்லலாம் என்று அசா3 என்னிடம் சொன்னார். முத்துப்பட்டியில் இருந்து அழகப்பாநகருக்கு நாங்கள் இருவரும் நடந்து வந்து 09.00 மணிக்கு அழகப்பாநகர் பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸிக்கு

நின்றுகொண்டிருந்தோம். அப்போது 1வது எதிரியும், எனது சித்திமகள் விஜயலெட்சுமியும் மற்றொரு பெண்ணும் இரு சக்கர வாகனத்தில் செல்வதை என் மாமா அசா3 பார்த்து என்னிடம் உன் தங்கை யாருடனோ வண்டியில் போகிறது என்று சொன்னார். நான் டக்குன்னு பார்க்கும் போது, 1வது எதிரியும், மற்றொரு பெண்ணும், என் தங்கையும் ஒரு வண்டியில் திருமங்கலம் செல்லும் ரோட்டில் சென்றுகொண்டிருந்தார்கள். அதன்பிறகு நானும் அசா3ம் பஜாருக்குச் சென்றுவிட்டு வந்து என் சித்தியிடம் சொன்னேன். ஆனால் எத்தனை மணிக்குச் சொன்னேன் என்ற நேரம் ஞாபகம் இல்லை. என் சித்தியிடம் சொன்னபோது, விஜயலெட்சுமி வேலைக்குத்தான் போயிருக்கிறாள் என்று சொன்னார். ஆனால் விஜயலெட்சுமி வேலைக்குச் செல்லவில்லை என்றும் 1வது எதிரியுடன் மற்றொரு பெண்ணுடன் வண்டியில்சென்றுகொண்டிருப்பதாகச் சொன்னேன். அதன் பிறகு விஜயலெட்சுமியை என் சித்தியும் அவரது மகன்களும் பல இடங்களிலும், 1வது எதிரியின் வீட்டிலும் தேடிப்பார்த்ததாகவும் அங்கு விஜயலெட்சுமியைக் காணவில்லை என்றும் 1 வது எதிரியும் அவரது வீட்டில் இல்லை என்று என் சித்தி என்னிடம் சொன்னார். அன்று இரவு முழுவதும் விஜயலெட்சுமி வீட்டிற்கு வராததால் 24ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக என் சித்தி என்னிடம் சொன்னார். ஒரு வாரம் கழித்து 01.10.2016ம் தேதி, ஜெய்கிந்துபுரம் காவல் நிலையத்தில் இருந்து என் சித்தியை அழைத்து, பழையூர் கிராமத்தில் ஒரு பெண் பிரேதம் புதைக்கப்பட்டு உள்ளது என்றும் அதனால் வந்து அடையாளம் காட்டுங்கள் என்று சொன்னதாக என் சித்தி என்னிடம் சொன்னார். நாங்கள் எல்லாரும் காலை சுமார் 10 முதல் 11 மணியளவில் அந்த பிரேதம் புதைத்திருந்த இடத்திற்குச் சென்றோம். பிணத்தை வெளியே எடுத்து வைத்திருந்தார்கள். என் சித்தி பிரேதத்தில் உள்ள நகை, மற்றும் துணிகளை வைத்து அது தன்னுடைய மகள் விஜயலெட்சுமி தான் என்று அடையாளம் காண்பித்தார். அப்போது நான் என் சித்தியிடம் 1வது எதிரிதான் விஜயலெட்சுமியை அழைத்துச் சென்றதை நான் பார்த்தேன் என்று அன்றே சொன்னேன்ல என்று

சொன்னேன். நானும் விஜயலெட்சுமியின் பிரேதத்ததைப் பார்த்தேன். அது என் சித்தி மகள் விஜயலெட்சுமியின் பிரேதம் தான். போலிசார் என்னை அன்றைய தினமே விசாரித்தார்கள். 04.10.2016 ம் தேதியன்று மீண்டும் என்னை போலிசார் விசாரித்தார்கள். நடந்த விபரத்தைச் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். இறந்துபோன விஜயலெட்சுமி எங்கு வேலை பார்த்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அவர் செல்போன் பயன்படுத்தும் விபரம் பற்றி எனக்குத் தெரியாது. திருப்பூரில் நான் தனியார் கம்பெனியில் வேலைபார்க்கவில்லை. பஜாருக்கு போகும்போது தான் 1 வது எதிரி விஜயலெட்சுமியை அழைத்துச் செல்வதைப் பார்த்தேன். நான் ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்திற்குப் போகவில்லை. அவர்கள் என்னை விசாரிக்கவில்லை. விஜயலெட்சுமியின் பிரேதத்தைப் பார்த்தபோது, அந்த உடலானது அடையாளம் காணக்கூடிய வகையில் இருந்தது என்றால் சரிதான். நான் பிரேதத்தைப் பார்த்தபோது, அந்த இடத்தில் இருந்த போலிஸ் அதிகாரிகளிடம் இறந்துபோனது என் தங்கை விஜயலெட்சுமிதான் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் அப்படி இருந்திருந்தால் அங்குள்ள அதிகாரிகளிடமும், காவல்துறையினரிடமும் சொல்லியிருப்பேன் என்றும் நான் அங்கு இல்லாததால் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அழகப்பாநகர் பஸ் ஸ்டாப்பில் அதிகமாக கூட்டமாக இருக்கும் என்றும் வாகன போக்குவரத்து மிகுந்த ஜனநடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். போலிசாரும் அங்கு இருப்பார்களா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. திருமங்கலத்தில் எனக்கு உறவினர்கள் உள்ளார்கள். நான் 20.09.2016 ம் தேதியன்று திருப்பூரில் இருந்து வந்துவிட்டு 25.09.2016 ம் தேதி வரை மதுரையில் இருந்தேன். அதன்பிறகு திருப்பூரில் இருந்து 28.09.2016 ம் தேதியன்று மதுரைக்கு வந்தேன். 28.09.2016 ம் தேதியன்று நான் மதுரைக்கு வருவதற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா

என்றால் என் தங்கை காணாமல் போனதால் அது சம்பந்தமாக நான் மதுரைக்கு வந்தேன். ஜெய்கிந்துபுரம் காவல்நிலையத்தினர் என்னிடம் நேரடியாகத் தகவல் எதுவும் சொல்லவில்லை. அசா3 எனது உறவினர்தான். 1வது எதிரியுடன் விஜயலெட்சுமி செல்வதை நானும் அசா3ம் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 23.09.2016ம் தேதியன்று ரயில்வே கேட் அப்போது மூடியிருக்கவில்லை. ரயில்வேகேட் அருகில் நானும் அசா3ம் நின்று பேசவில்லை என்றும் 1வது எதிரியுடன் விஜயலெட்சுமி செல்வதை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரேதம் தோண்டப்பட்ட இடத்தில் சுமார் 50 முதல் 70 பேர் இருந்தார்கள். அதில் அரசு அதிகாரிகளும் இருந்தார்கள். அழகப்பாநகர் பஸ் ஸ்டாப்பில் இருந்து 4 வழிச்சாலை எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 4,5 கிமீ தூரத்தில் இருக்கும். அழகப்பாநகரில் இருந்து திருமங்கலம் வரையிலான இடைப்பட்ட பகுதிகளில் நிறைய கிராமபகுதி, நகர்ப்பகுதி உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் 20.09.2016ம் தேதியன்று நான் மதுரைக்கு வரவில்லை என்றும் 23.09.2016ம் தேதியன்று 1வது எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் விஜயலெட்சுமி சென்றதை நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த விஜயலெட்சுமி எனது தங்கை என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேதத்தில் எந்த ஒரு நகையும் காணப்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை